செய்தி குறிப்பு எண். 58 29–03–2007

**பாகிஸ்தான் நாட்டில் இஸ்லாமாபாத்தில் 26–3–2007 அன்று நடைபெற்ற மூன்றாவது ஆசிய மற்றும் இந்திய வட்டாரங்களின் காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் இந்தியாவில் சார்பில் கலந்துகொண்டு, 'ஆயிரமாண்டுகள் முன்னேற்ற இலக்குகள் செயலாக்கத்தில் வறுமை ஒழிப்பில் பாராளுமன்றமங்களின் பங்கு' என்ற தலைப்பில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு வீ.பெ. துரைசாமி அவர்கள் ஆற்றிய உரையாவது:**

மாண்புமிகு சபைத் தலைவர் அவர்களே, காமன்வெல்த் பாராளுமன்றக் சங்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களே,

இந்த மாட்சிமைப் பொருந்திய மன்றத்தில் உரையாற்றுவதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். காமன்வெல்த் பாராளுமன்ற சங்கமானது, மக்களின் வாழ்க்கை நிலையில் முன்னேற்றம் காணவும், சர்வதேசக் கூட்டுறவை மேம்படுத்தவும் அமைக்கப்பட்டது. அந்நிலையில் அது முன்னேற்றம் கண்டு, இன்றைக்கு பல்வேறு வகையான சமூக, கலாச்சாரங்கள் மற்றும் பல்வேறு பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளும் ஒரு பரந்த பாராளுமன்ற அமைப்பாக மலர்ந்திருக்கிறது.

ஆயிரமாண்டு முன்னேற்ற இலக்குகளின், குறிப்பாக வறுமை ஒழிப்பின் செயல்பாடுகளை பாராளுமன்றங்கள் கண்காணிக்கும் பொறுப்பை கருத்து பரிமாறலுக்கான தலைப்பாக இந்த மாமன்றம் எடுத்துக்கொண்டது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. நான் இதைக் குறிப்பிட காரணம், சமுதாயத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் வறுமையே அடிப்படைக் காரணமாக இருக்கிறது. இது ஆசியப் பகுதிக்கு மிகவும் பொருந்தும் என்பதே உண்மை. 2000 ஆவது ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஆயிரமாண்டு மாநாடு என் நினைவிற்கு வருகிறது. இன்றைககு ஆயிரமாண்டு முன்னேற்ற இலக்குகள் என்று அழைக்கப்படுகின்ற மனிதக் குலத்தின் முன்னேற்றப் பாதைக்கான திட்ட வடிவம் அப்போதுதான் தயாரிக்கப்பட்டது.

உச்சபட்ச வறுமை மற்றும் பசி ஒழிப்பு, அனைவருக்கும் ஆரம்பக் கல்வி, பெண்ணுரிமை மற்றும் பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல், சிசு இறப்பைக் குறைத்தல், மகப்பேறு நலன் பேணல், எய்ட்ஸ், மலேரியா போன்ற நோய்த் தடுப்பு, சுற்றுசூழல் பராமரிப்பு மற்றும் வளர்ச்சிக்கான சர்வதேசக் கூட்டுறவு ஆகிய எட்டு பரிமாணங்களைக் கொண்ட அந்தத் திட்ட வடிவம் சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான திறவுகோல் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவற்றைக் கையாள்வதற்கான உத்திகளைத் திட்ட வடிவில் தயாரித்துக் கொடுக்கும் ஊற்றுக் கண்ணாக பாராளுமன்றங்கள் விளங்குவதை நாம் நன்கு அறிவோம்.

குறிப்பிட்ட எட்டு இலக்குகளில், உச்சபட்ச வறுமை மற்றும் பசி ஒழிப்புதான் முதலில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வறுமை ஒழிப்பில் பாராளுமன்றங்களின் பங்கு தலையாயது என்பதை மறுப்பதற்கில்லை. பாரளுமன்றங்கள் எந்த வகையில் செயல்பட்டு வறுமை ஒழிப்பிற்கு தம் பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பது அந்நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள அதிகாரப் பங்கீட்டைப் பொருத்தது.

இந்தியாவில் பாராளுமன்றம், நிர்வாகத் துறை, நீதித் துறை ஆகிய மூன்றும் அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நமது அதிகார வரம்பிற்குள் பணியாற்றுகின்றன. நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களின் சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் நிர்வாகத் துறையின் நேரடி மேற்பார்வையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த அதிகார வரம்பின் காரணத்தால், இந்திய நாடாளுமன்றத்திற்கு திட்ட அமலாக்கத்தை மேற்பார்வையிட, குறிப்பாக வறுமை ஒழிப்புத் திட்டங்களை மேற்பார்வையிட அதிகாரம் இல்லை என்று கருதிவிடலாகாது. நிர்வாகத் துறையின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் அமைச்சரவை நாடாளுமன்றத்திற்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டதாகும். இந்திய நாடாளுமன்றத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் அவற்றின் அமலாக்கம் பற்றி விவாதிக்க கணிசமான நேரம் ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் நான் பெருமையடைகிறேன்.

கேள்விகள், சிற்பபுக் கோரிக்கைள், விவாதம், சிறப்புப் பிரேரணை, தனிநபர் மசோதா, தீர்மானம் போன்ற பல்வேறு முறைகளைப் பின்பற்றி மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பற்றியும், அவற்றைத் துரிதமாகச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் பேசிவருவது குறிப்படத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்புகின்ற கேள்விகளுக்கும், பிரச்சினைகளுக்கும், நாடாளுமன்ற அவையில் தக்க பதில் கூற அமைச்சர்கள் கடமைப்பட்டவர்கள். அவ்வாறு அமைச்சர்கள் கொடுக்கும் பதில்களையும் உத்திரவாதங்களையும் பின் தொடர்ந்து அவற்றைச் செயலாக்கம் செய்வதற்கென்றே மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய உத்திரவாதங்கள் நிறைவேற்றக் குழு என்று ஒன்று உள்ளது.

நிர்வாகத்தின்மீது நிர்பந்தத்தை ஏற்படுத்துகின்ற ஒரு அரிய பணியையும் இந்திய நாடாளுமன்றம் செய்து வருகிறது. திட்டங்களை அமல்படுத்துதல் தொடர்பான தகவல்களை அமைச்சர்களிடமிருந்து கோருவது மாத்திரமின்றி, வறுமை ஒழிப்பிற்கு இன்னும் சிறப்பான திட்டங்களைத் தீட்ட வேண்டியும், அதிக பண ஒதுக்கீடு கோரியும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களை நிர்பந்திப்பது வழக்கத்தில் உள்ளது. இந்தியாவின் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் இந்திய நாடாளுமன்றம் மிகுந்த சிரத்தையுடன் சீரிய பணியாற்றியுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியாவின் தனித்துவமான அரசியலமைப்புப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தியா பல மாநிலங்கள் அடங்கிய ஒரு நாடு என்பதால், ஒவ்வொரு மாநிலத்தின் நிர்வாகத்திற்கும், மேம்பாட்டிற்கும் அந்தந்த மாநில அரசே நேரடிப் பொறுப்பாகும். எனவே, மாநிலங்களில் உள்ள சட்டமன்றப் பேரவைகளும், நாட்டின் மேம்பாடு குறித்த திட்ட வரைவு மற்றும் அமலாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன. வறுமை ஒழிப்பிற்கான திட்டங்களை மாநில அரசுகள் உருவாக்கி அமல்படுத்தும்போது, மத்தியில் நாடாளுமன்றம் ஆற்றும் பணியை மாநிலங்களில் சட்டமன்றங்கள் ஆற்றுகின்றன.

மத்திய, மாநில அரசுகள் வறுமை ஒழிப்பிற்கான திட்டங்களைத் தனித் தனியே தீட்டினாலும், அவை ஒன்றையொன்று இசைந்து, வறுமை ஒழிப்பை விரைவில் எட்டுவதாக அமைந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு தற்போதைய தமிழக அரசு வறுமை ஒழிப்புப் பாதையில் மைல் கல்லாக ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளது. அத்திட்டத்தின்கீழ் நிலமற்ற விவசாயிகளுக்கு தலா 2 ஏக்கர் விவசாய நிலம் கொடுக்கப்படுகின்றது. மேலும், வறுமையை ஒழித்திடும் நோக்கில் 2 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்குத் தலா 20 கிலோ அரிசி, 40 ரூபாய்க்கு, அதாவது 1 கிலோ அரிசி 2 ரூபாய் வீதம் மாதந்தோறும் வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்துடன் அன்றி, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட வளர்ச்சிக் குழுவில் பதவிசார் உறுப்பினர்களாக உள்ளனர். திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில், மாவட்ட நிர்வாகத்திற்கும் இவர்கள் ஆலோசனை வழங்கலாம். எந்தவொரு திட்டமானாலும், குறிப்பாக ஒரு வறுமை ஒழிப்புத் திட்டமானது சரியாகச் செயல்படுத்தப்படவில்லை என்று அவர்கள் எண்ணினால், தங்களது நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்திற்குச் சென்று, அமைச்சரவையின் கவனத்திற்கு அதைக் கொண்டு சென்று, அமைச்சர்கள் வழியே அத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தலாம்.

இறுதியில் மிகப் பெரிய ஒரு கேள்விக்குப் பதில்களை நாம் கூறக் கடமைப்பட்டுள்ளோம். ஆயிரமாண்டு முன்னேற்ற இலக்குகளை அடையும் செயல்பாட்டைக் கண்காணிப்பதில் நாடாளுமன்றங்களின் தற்போதைய பங்களிப்பு போதுமானதா? இக்கேள்வி பன்முகம் கொண்டது மாத்திரமல்ல, சற்று ஆழ்ந்து யோசிக்க வைப்பதும்கூட. இதற்கான பதில் ஒரு நாட்டின் சமுதாய அரசியல் அமைப்பின் பரிமாணத்தைப் பொறுத்தே அமையும். இந்திய நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றத்திலும் பணியாற்றிய என்னுடைய அனுபவத்தின் அடிப்படையில் சீர்தூக்கிப் பார்க்கும்போது, ஆயிரமாண்டு முன்னேற்ற இலக்குகளை அடையும் செயல்பாட்டைக் கண்காணிப்பதில் இந்திய நாடாளுமன்றம் தமது பங்களிப்பைத் தொடர்ந்து தொய்வின்றி தருவதுடன், நாளுக்கு நாள் அதிக முனைப்புடன் வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்து வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

------

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.